[1987 ஏப்ரல் 22

(ஆஆ) திருவொற்றியூர் தொகுதியில் கடல் அரிப்பால் குப்பங்கள் பாதிப்பு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு திரு. ஜி. கே. ஜெ. பாரதி அவர்கள் கொடுத்து இருக்கிறார்கள். அவர்கள் இருக்கையில் இல்லாததால் திருமதி டி. யசோதா அவர்கள் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "திருவொற்றியூர் தொகுதியைச் சேர்ந்த பல குப்பங்கள் கடல் அரிப்பால் பாதித்துள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

திருவொற்றியூர் தொகுதியில் நல்ல தண்ணீர் ஓடைக் குப்பத்திலிருந்து நெட்டுக்குப்பம் வரை 16 கிலோ மீட்டர் தூரத்தில் சில பகுதிகளில் கடலரிப்பு ஏற்பட்டுள்ளது. இதில் மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்துள்ள கீழ்க்கண்ட குப்பங்களும் அடங்கியுள்ளன:

1. அப்பர் குப்பம்
2. திருவொற்றியூர் குப்பம்
3. பலகைத் தொட்டி குப்பம்
4. காசி விசுவநாதர் கோயில் குப்பம்
5. விசாலாட்சிபுரம்
3. பலகைத்தொட்டி குப்பம்
7. இந்திராகாந்தி குப்பம்
8. எர்ணாவூர் குப்பம்
9. சின்ன குப்பம்
10. பெரிய குப்பம்.

மேலே கூறப்பட்டுள்ள குப்பங்களில் ஒன்றான பலகைத் தொட்டிக் குப்பம் அமைந்துள்ள, 3,120 மீட்டர் முதல் 4,120 மீட்டர் தூரத்திற்கு ஏற்கனவே கடலரிப்பு தடுப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அப்பர் குப்பம், திருவொற்றியூர்

1987 ஏப்ரல் 22] [திரு. ப. உ. சண்முகம்]

குப்பம், காசி விசுவநாதர் கோயில் குப்பம், விசாலாட்சிபுரம் ஆகிய நான்கு குப்பங்களில் கடலரிப்பு பணிக்கான மதிப்பீடுகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

2. பெரிய காசிகோயில் குப்பம், இந்திராகாந்தி குப்பம், எர்ணாவூர் குப்பம், சின்ன குப்பம் மற்றும் பெரிய குப்பம் அமைந்துள்ள பகுதிகளில் கடலரிப்பு ஏதுமில்லை.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதில் நீங்கள் கேள்வி கேட்க முடியாது. அடுத்த உறுப்பினருடைய கவன ஈர்ப்பை மூவ் செய்தால் கேள்வி கேட்க முடியாது. முறையை மாற்றினால் தொடர்ந்து அது பாதிக்கும் (குறுக்கீடு) அப்படி ஒரு கன்வென்ஷனாக நாம் வைத்து இருக்கிறோம். வேறு ஒன்றும் இல்லை. அதை மாற்றினால் இன்றைக்கே கேட்பார்கள், ஏன் அவர்களுக்கு கொடுத்தீர்கள், எங்களுக்கும் கொடுங்கள் என்று கேட்பார்கள்.

திருமதி டி. யசோதா: எங்களிடம்தான் இந்த நடைமுறை யைப்பற்றி எல்லாம் பேசுகிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அப்படி இல்லை. உங்களுக்காக மட்டும் நடைமுறையை மாற்றிக்கொள்ள முடியாது. நீங்கள்தான் நடைமுறையை மீற முயற்சிக்கிறீர்கள். அதனால்தான் இப்படிச் சொல்ல வேண்டியிருக்கிறது.

(இஇ) அடையாறு ஆற்றின் கரையோரத்து மக்களுக்கு மாற்று இருப்பிடம் அளிக்க நடவடிக்கை.

***திரு. சைதை சா. துரைசாமி**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்தபடி அடையாறு ஆற்றின் கரையோர மக்களுக்கு மேடான பகுதிகளில் மாற்று இடம் கொடுக்க, குடிசை மாற்று வாரியம் அறநிலையத் துறைக்கு சொந்தமான இடத்தில் ஏற்கனவே பெற்ற அனுமதியின் பேரில். பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் பாதியிலேயே அறநிலையத் துறை தடை ஆணை பிறப்பித்தக் காரணத்தினால் ஏற்பட்டுள்ள நிலை